भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1882 (2/1882), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (74/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமையுடையான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமையுடையான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

## அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899

### (சட்ட எண் 4/1899)[1]

[1899, பிப்ரவரி 3]

அரசாங்கத்தின் சொத்தாகவோ அல்லது அதன் கையுடைமையிலோ இருக்கிற மற்றும் நகராட்சி ஒன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்கிற குறித்தசில கட்டடங்களையும், நிலங்களையும் நகராட்சிக் கட்டடங்கள் சட்டங்களின் செயற்பாட்டிலிருந்து விலக்களிப்பதற்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

அரசாங்கத்தின் சொத்தாகவோ அல்லது அதன் கையுடைமையிலோ இருக்கிற மற்றும் நகராட்சி ஒன்றின் எல்லைகளுக்குள் அமைந்திருக்கிற குறித்தசில கட்டடங்களையும், நிலங்களையும் நகராட்சிக் கட்டடங்கள் சட்டங்களின் செயற்பாட்டிலிருந்து விலக்களிப்பதற்கு வகைசெய்வது உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

குறுந்தலைப்பும் அளாவுகையும்.

1. (1) இந்தச் சட்டம், அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 என்று வழங்கப்பெறும்.

(2) இது [2][1956, நவம்பர் 1ஐ ஒட்டி முன்பு பகுதி ஆ மாநிலங்களில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள்] நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும். [3][* *]

[4][* * * *]

"நகராட்சி அதிகார அமைப்புகள்" பொருள் வரையறை செய்யப்படுகிறது.

2. இந்தச் சட்டத்தில் "நகராட்சி அதிகார அமைப்பு" என்ற சொற்றொடர், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் அல்லது செய்சட்டம் ஏதொன்றினாலோ அல்லது அவற்றின் வகையங்களின் வழியாகவோ அமைக்கப்பட்ட ஒரு மாநகராட்சி மன்றத்தையோ அல்லது நகராட்சி ஆணையர்களின் ஒரு குழுவையோ உள்ளடக்கும்.

நகராட்சிகளுக்குள் கட்டடங்கள் எழுப்புதல் முதலியவற்றை ஒழுங்குறுத்துவதற்குள்ள நகராட்சி கட்டடங்களிலிருந்து குறித்தசில அரசாங்கக் கட்டடங்களுக்கு விலக்களிப்பு.

3. நகராட்சி ஏதொன்றின் எல்லைகளுக்குள் கட்டடங்களை எழுப்புதல், மீண்டும் எழுப்புதல், கட்டுதல், மாற்றுதல் அல்லது அவற்றைப் பேணுதலை ஒழுங்குறுத்துவதற்கு, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் அல்லது செய் சட்டம் ஏதொன்றில் அடங்கியுள்ள எதுவும் 5[அரசாங்கத்தின்] சொத்தாகவோ அல்லது அதன் கையுடைமையிலோ இருக்கிற அல்லது 5[அரசாங்கத்தின்] சொத்தாகவோ அல்லது அதன் கையுடைமையிலோ இருக்கிற நிலத்தின்மீது எழுப்பப்பட்ட இருக்கிற, பொதுப்பணிக்காக அல்லது பொது நோக்கம் எதற்காகவும் பயன்படுத்தப்படும் அல்லது வேண்டுறுத்தப்படும் கட்டடம் எதற்கும் பொருந்துதல் ஆகாது:

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக, இந்திய அரசிதழ் 1896, பகுதி V, பக்கம் 256ஐப் பார்க்கவும் மற்றும் தேர்வுக் குழுவின் அறிக்கைக்காக மேற்படி அரசிதழ் 1899 இன் பகுதி V, பக்கம் 15ஐப் பார்க்கவும்.
2. சட்டங்கள் இணக்க ஆணை, 1956ஆல் "பகுதி ஆ மாநிலங்கள்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
3. நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1914 இன் (10/1914) பிரிவு 3ஆலும் இணைப்புப்பட்டியல் IIஆலும் விட்டுவிடப்பட்டது.
4. சட்டங்கள் இணக்க ஆணை, 1950ஆல் மாற்றாகஅமைக்கப்பட்டது.
5. சட்டங்கள் இணக்க ஆணை, 1950 ஆல் " முடியாட்சி" என்ற சொல்லுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

வரம்புரையாக: மேற்சொன்னவாறான [1][* * *] பாதுகாப்புத் தொடர்புடைய கட்டடம் ஒன்றாக இல்லாத அல்லது [2][உரிய அரசாங்க]த்தின் கருத்தில் மந்தணமாகவோ, மறையமாகவோ கருதப்படவேண்டிய வரைபடத்தை அல்லது அமைப்பை உடைய கட்டடம் ஒன்றாக இல்லாதிருக்கிற கட்டடம் எதையும் எழுப்புதல், மீண்டும் எழுப்புதல், கட்டுதல் அல்லது முதன்மையான கட்டுமானத்தை மாற்றுதல் ஆகியவற்றைச் செய்ய எண்ணியிருக்கிறவிடத்து, அந்தக் கருதப்பட்ட வேலையைத் தொடங்குவதற்கு, முன்பு, அந்த வேலை பற்றிய தகுமான அறிவிப்பு நகராட்சி அதிகார அமைப்பிற்கு கொடுக்கப்படுதல் வேண்டும்.

*நகராட்சிகளினுள் இருக்கிற குறித்த சில அரசாங்கக் கட்டடங்களை எழுப்புதல் முதலியவை பற்றிய மறுப்புரைகள் அல்லது தூண்டுரைகள் எப்படி செய்யபட வேண்டும் மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது.*

4. (1) [1][* * *] பாதுகாப்புத் தொடர்புடைய கட்டடம் ஒன்றாக இல்லாத அல்லது [2][உரிய அரசாங்க]த்தின் கருத்தில் மந்தணமாகவோ மறையமாகவோ கருதப்படவேண்டிய வரைபடம் அல்லது அமைப்பை உடைய கட்டடம் ஒன்றாக இல்லாதிருக்கிற கடைசி முந்திய பிரிவில் சொல்லப்பட்டவாறான கட்டடம் எதையும் பொறுத்தவரையில், மாநகராட்சி அதிகாரஅமைப்பு அல்லது அதனால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரும், முன்னதாகப் பெறப்பட்ட மாநில அரசாங்கத்தின் அனுமதியுடன், ஆனால் பிறவழிசெல்லாமல் மற்றும் மாநில அரசாங்கத்தினால் பொது அல்லது தனியுறு ஆணை வாயிலாக சுமத்தப்படலாகும் வரையறைகள் அல்லது வரைக்கட்டுக்கள் எவற்றிற்கும் உட்பட்டு, அந்த நிலத்தையும் கட்டடத்தையும் மற்றும், நேர்வுக்கேற்ப, அதனை எழுப்புதல், மீண்டும் எழுப்புதல், கட்டுதல் அல்லது முதன்மையான கட்டுமானத்தை மாற்றுதல் தொடர்புடைய அனைத்து வரைபடங்களையும் ஆய்வு செய்யலாம், மற்றும் மாநில அரசாங்கத்திற்கு, அத்தகைய நகராட்சி அதிகாரஅமைப்பு, அத்தகைய எழுப்புதல், மீண்டும் எழுப்புதல், கட்டுதல் அல்லது முதன்மையான கட்டுமானத்தை மாற்றுதல் குறித்து தக்கதெனக் கருதலாகும் மறுப்புரைகள் அல்லது தூண்டுரைகள் பற்றிய எழுத்துவடிவிலான விவரஉரை ஒன்றை பணிந்தனுப்பலாம்.

(2) மேற்சொன்னவாறு பணிந்தனுப்பப்பட்ட மறுப்பீடு அல்லது தூண்டுரை ஒவ்வொன்றும் மாநில அரசாங்கத்தினால் ஓர்வு செய்யப்படுதல் வேண்டும், அது, தாம் தக்கதெனக் கருதும் புலனாய்வுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றுக்குப் பின்பு, அதன் பேரில் ஆணைகள் பிறப்பித்தல் வேண்டும், மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், அத்தகைய ஆணைகளுக்கு இணங்க, நேர்வுக்கேற்ப, எழுப்பப்படுதல், மீண்டும் எழுப்பப்படுதல், கட்டப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: மாநில அரசாங்கமானது, மேற்சொன்னவாறான மறுப்புரை அல்லது தூண்டுரை எதனையும் ஒதுக்கித் தள்ளினாலோ அல்லது புறக்கணித்தாலோ, அவ்வாறு செய்வதற்கான தமது காரணங்களை எழுத்துவடிவில் கொடுத்தல் வேண்டும்.

[3][ * * * * ]

---

1. மையச் சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள் ஆணை, 1948ஆல் " உயர் அதிகாரமுடைய " (இம்பீரியல்) என்ற சொல் விட்டுவிடப்பட்டது.
2. இணக்க ஆணை, 1937ஆல் " அந்த மாநிலம்" என்பதற்கு மாற்றாகஅமைக்கப்பட்டது.
3. இணக்க ஆணை, 1937 இனால் உட்பிரிவு (3) விட்டுவிடப்பட்டது.